DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.II, Mayiladuthurai

**CC. No. 347/2025**

**eposition of LW1 examined as PW1** Dt. 10.03.2026

| | |
|---|---|
| Name | முருகவேல் |
| Father's/Husband's Name | நடராஜன் |
| Village | காவேரி கரை தெரு. |
| Taluk | குத்தாலம் |
| Age | 50/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 10.03.2026

(Accused present)

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியல் வசித்து பணிபுரிந்து வருகிறேன். தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். கடந் த 01.07.2025 ம் தேதி மாலை 4.00 மணியளவில் மயிலாடுதுறை to சித்தாம்பூர் ரூட் எண் A29 மகளிர் விடியல் பயணபேருந்தை டிரிப் எடுத்து சென்று கொண்டிருந்தேன். மாலை 5.15 மணியளவில் சத்தியாநகர் அருகில் சென்று கொண்டிருந்த போது ஆஜர் எதிரி புல்லட்டில் எதிர் திசையில் பேருந்தின் மீது மோதுவது போல் வேகமாக வந்தார். நான் வண்டியை நிறுத்திவிட்டு ஏன் இவ்வளவு வேகமாக வருகிறீர்கள் என்று ஆஜர் எதிரியை கேட்டேன். அதற்கு எதிரி என்னை பார்த்து நீதான் நிறுத்தி மெதுவாக வரவேண்டும் என்று நீ என்ன பெரிய மயிரா என்றும், குச்சிக்காரி மகனே, தேவிடியா மகனே என்று தகாத வார்த்தைகளில் திட்டினார். அப்போதும் நான் வண்டியை விட்டு இறங்கவில்லை உடனே ஆஜர் எதிரி ஓட்டுநரின் அருகே உள்ள கதவை திறந்து எனது நெஞ்சிலும் முதுகிலும் கையால் குத்தினார். அதனால் எனக்கு நெஞ்சு வலி வந்தது. என்னை கொன்றுவிடுவதாகவும் மிரட்டினார். அதன்பிறகு கோமல் ஆரம்ப சுகாதார மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்து கொண்டேன். அங்கிருந்து 108 ஆம்புலன்ஸ் மூலம் மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக நடத்துநர் கஜேந்திரனுடன் சென்று 3 நாட்கள் தங்கி உள்நோயாளியாக சிகிச்சை எடுத்து கொண்டேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார்வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **அந்த புகார்வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்

N. Murugavel

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எனது சொந்த ஊர் எது என்றால் குத்தாலம் ஆகும். நான் அரசு போக்குவரத்து கழகத்தில் எத்தனை ஆண்டுகளாக ஓட்டுனராக பணிபுரிந்து வருகிறேன் என்றால் 16 ஆண்டுகளாக ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். கோமலிலிருந்து சித்தாம்பூர் செல்லும் சாலை என்பது குறுகிய சாலை என்றால் சரிதான். மேற்படி சாலையில் நான் பேருந்தை இயக்கும்போது எதிரே வாகனங்கள் வந்தால் அந்த வாகனங்களை ஓரம் கட்டிய பிறகுதான் எனது பேருந்து செல்ல முடியும் என்றால் சரிதான். எனது புகார் வாக்குமூலம் அ.சா.1-ல் கடந்த 01.07.2025 மாலை 5.00 வழக்கம்போல் மயிலாடுதுறை பழைய பேருந்து நிலையத்தில் இருந்து பேருந்தை ஓட்டிக்கொண்டு செல்லும்போது எனக் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மயிலாடுதுறையில் இருந்து சித்தாம்பூர் எத்தனை கிலோமீட்டர் இருக்கும் என்றால் 20, 22 கிலோமீட்டர் இருக்கும். மயிலாடுதுறையில் இருந்து சித்தாம்பூர் செல்வதற்கு எவ்வளவு நேரம் ஆகும் என்றால் 3/4 மணி நேரமாகும். எனது புகார் வாக்குமூலம் அ.சா.1-ல் அடையாளம் தெரியாத நபர் மோத வந்தார் என்றுதான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். போலீசார் விசாரணை செய்து எதிரி யார் என தெரிவித்தார்கள் என்றால் சரிதான். எனது புகார் வாக்குமூலம் அ.சா.1-ல் எதிரி என்ன வார்த்தைகளால் திட்டினார் எனக் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்திலும், போலீசார் விசாரணையிலும், நீதிமன்ற சாட்சியத்திலும் முன்னுக்கு பின் முரணான சங்கதிகளை தெரிவித்துள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவத்தன்று சம்பவ நேரத்தில் எதிரி சம்பவ இடத்திற்கு வரவில்லை என்றால் சரியல்ல. எனது முதல் விசாரணை சாட்சியத்தில் தெரிவித்தவாறு எதிரி என்னை கொச்சை வார்த்தைகளால் திட்டவில்லை என்றாலும், கொலை மிரட்டல் விடுக்கவில்லை என்றாலும் சரி அல்ல. கோமலிலிருந்து சித்தாம்பூர் செல்லும் சாலை குறுகிய சாலை என்றாலும் அந்த சாலையில் நான் தான் அதிவேகமாக பேருந்தை இயக்கி சென்றேன் என்றால் சரியல்ல. நீதிமன்ற சாட்சியத்தில் தெரிவித்த அனைத்து விவரங்களையும் போலீசார் விசாரணையில் தெரிவித்துள்ளேனா என்றால் தெரிவித்துள்ளேன். அவர் சொன்னால் சரி அல்ல என்றாலும், நீதிமன்ற சாட்சியத்தில் ஒருவிதமாகவும், போலீசார் விசாரணையில் ஒரு விதமாகவும் சங்கதிகளை தெரிவித்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி மீது பொய்யாக புகார் வாக்கு மூலம் அளித்து அதன் அடிப்படையில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன். இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது என்றால் சரியல்ல.நீதிமன்றத்தில் 5.15 மணிக்கு சம்பவம் நடந்ததாக பொய்யாக சாட்சியமளித்துள்ளேன் என்றால் சரியல்ல. புகார் வாக்குமூல சங்கதிகளின் படி 5.00 மணிக்கு மயிலாடுதுறையில் இருந்து பேருந்து எடுத்து 5.15 மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்று இருக்க வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல. நான் மயிலாடுதுறை

பேருந்து நிலையத்திலிருந்து 4.50 மணிக்கு பேருந்தை எடுத்து சம்பவ இடத்திற்கு 5, 5.15 மணிக்கு சென்று விட்டேன். அவ்வாறு சொன்னால் சரியல்ல என்றாலும் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணைஇல்லை.**